சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி "

VOL-10. தொகுதி-10. | March மார்ச்சு 1915. | No-8. பகுதி-8.

ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்.

ஒழுக்கமென்பது உயர்ந்தா ரிழிந்தாரென்னும் இருதிறத்தார்க்கும் சிறப்பினைத் தருவதாக விருத்தலின், அதனை ஒவ்வொருவரும் தம்முயிரினும் சிறந்ததாகப் பாதுகாத்து வருதல்வேண்டும்; பாதுகாத்து வருவதில் அவர் பராமுகமா யிருப்பாராயின், இழிந்த நிலைமையையடைவது நிச்சயமாம் எல்லாப்பொருளினும் சிறந்தது யாதென நன்குவிசாரித்து நோக்குவோமாயின், அஃது உயிராமென்பது நன்றாக விளங்குவதாம்; அத்தன்மையதாய உயிரும் ஒழுக்கம்போலச்சிறப்பினைத்தருவதின்மையின், உயிரைப்பார்க்கிலும் ஒழுக்கம் சிறப்புடையதாக விருக்கின்றது. ஒழுக்க மில்லாதவர் உயர்குலத்திற் பிறந்தவரா யிருப்பினும், அவர் இழிகுலத்தாரே யாவர்; ஒழுக்க முடையவர் இழிகுலத்தில் பிறந்தாரா யிருப்பினும், அவர் உயர்குலத்தா ராவரென்பதனை நன்கு சிந்தனைசெய்து வருகின்றவர் ஒழுக்கத்தினைத் தம்முயிரினும் சிறப்புடையதாகப் பாதுகாத்து வருவாரென்பது ஒருதலையாம். ஒருதலை-நிச்சயம்.

ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலை (ஆசிரமங்) களினின்று அவற்றிற்கோதிய அறங்களில் தவறா தொழுகுதலாம். அறநூல்கள் சொல்லியவற்றுள் இக்காலத்திற்குப் பொருந்தாதனவற்றை பொழித்துச் சொல்லாதனவற்றுள் பொருந்துவனவற்றைக் கொண்டு ஒழுகுதலை இங்கு முக்கியமாக ஒழுக்கமாம். உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றா லொழுகுவதாகிய ஒழுக்கம் அறிவில்லா

தவரிடத்து நிலைபெறுவதில்லையாம். அவ்வறிவோ கல்வியில்லாதவரிடத்து நிலைபெறுவதில்லையாம். ஆகவே கல்வியும், அதன்பயனாய அறிவுமுடையவரன்றி, மற்றவர் ஒழுக்கமுடையவரா யிருப்பரென்பது பேச்சு மாத்திரமாம். இதனால் நாம் ஒழுக்க முடையவர் அறிவும் அதற்கேதுவாய கல்வியு முடையாரென்றும், ஒழுக்கமில்லாதவர் அவ்விரண்டு மில்லாதாரென்றும் நிச்சயமாக அறியலாம். கல்வியையும் அதன் பயனாகிய அறிவையும் பெறாதவர் ஒழுக்கமுடையவரா யொழுகி உயர் நிலையினையடைவது ஒரு வாற்றானு மில்லையாம். ஒழுக்கம் யாரிடத்து நிலைபெற்று வருகின்றதென்று சிறிதூகித்து நோக்கினால், அந மனமொழிமெய்கள் தீயவழியிற் செல்லாதடங்குத லுடையவ ரிடத்தன்றி மற்றவரிடத்து நிலைபெற்றுவருவதில்லையா மென்பது விளங்குவதாம். ஒழுக்கத்தால் மேம்பாடடையவிரும்புகின்றவர் கல்வியையும் அதனாலாய அறிவையு முடையவராக விருக்க விரும்புவதோடு மனம் வாக்குக் காயமென்னும் திரிகரண அடக்கமு முடையவராக விருத்தல் வேண்டும். இவ்வடக்கமுள்ள விடத்து ஒழுக்கம் பொன்மலர் நாற்ற முடைத்து என்பது போலச் சிறந்து விளங்குவதாம்.

உலகத்தோடு பொருந்த நடத்தலென்னும் ஒழுக்கம் நன்றியறிதல், பொறையுடைமை, இன்சொல், இன்னா செய்யாமை, கல்வி, ஒப்புரவறிதல், அறிவுடைமை, நல்லினத்தாரோடு நட்புச் செய்தல் என்னும் எட்டுமில்லாத விடத்துத் தோன்றாதாக விருத்தலின், இவ்வெட்டும் அதற்குக் காரணமாயிருக்கின்றன. அவற்றை யுடையவர் ஒழுக்கமுடையவராக விருத்தல் தவறுவதில்லையாம்.

(1) நன்றியறிதலாவது பிறர் செய்த உதவியை மறவாதிருத்தலாம்.

(2) பொறையுடைமையாவது பிறர் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்ளுதலாம்.

(3) இன்சொல்லாவது வஞ்சகமின்றி யாவரிடத்தும் இனிய சொற்களைச் சொல்லுதலாம்.

(4) இன்னா செய்யாமையாவது, பயனை நோக்கியாவது கோபத்தாலாவது சோர்வாலாவது பிராணிகளுக்குத் தீமை செய்யாமையாம்.

(5) கல்வியாவது அறம் பொருளின்பம் வீடென்னும் உறுதிப்பொருள்களை யுணர்த்தும் நூல்களைக் கற்றலாம்.

(6) ஒப்புரவறிதலாவது உலகநடையினை யறிந்து உபகாரஞ் செய்தலாம்.

(7) அறிவுடைமையாவது கல்வி கேள்விகளாலாய அறிவோடு உண்மை யறிவை யுடைத்தாயிருத்தலாம்.

(8) நல்லினத்தாரோடு நட்புச் செய்தலாவது தீநெறியிற் செல்வதொழித்து நன்னெறியிற் செலுத்தும் பேரறிவுடையவரோடு நட்புச்செய்தலாம்.

இவ்வெட்டு முடையவர் ஒழுக்கமுடையவரா யிருத்தல் தவறுவதின்மையின், இவ்வெட்டினையுமுடையராக விருக்க ஒவ்வொருவரும் முயலுதல் வேண்டும்; முயன்றால், அவர் ஒழுக்கத்தால் மேம்பட்டு விளங்குதல் பிறழாததாம்.

வருணம் குடிமை யென்பனவற்றுள் குடிமையே சிறப்புடையதாம். குடிமை யில்லாதவர் வருணத்தால் சிறப்படைவதில்லையாம். வருணமாவது பிராஹ்ம க்ஷத்திரிய முதலிய சாதியாம்; குடிமையாவது உயர்ந்தகுலத்தில் பிறந்திருத்தலாம்; அஃதாவது வம்சபாம்பரை பிறழாதிருப்பதாம்.

ஒழுக்கம், உண்மையுரைத்தல், பழிபாவங்களுக்கேதுவாய செயல்களைச்செய்தற்கு நாணுதல் என்பன முறையே உடம்பிலும் வாக்கிலும் மனத்திலும் நிகழுவனவாக விருத்தலை யூன்றி நோக்குவோர்க்கு ஒழுக்கமுடையவர் உண்மையுரைத்தலையும பழிபாவங்களுக் கேதுவாய செயல்களைச் செய்வதற்கு நாணுதலையுமுடையராக விருப்பாரென்பது நன்கு விளங்குவதாம்.

திரிசங்கு மகாராஜன் தீயொழுக்கத்தை மேற்கொண்டமையால், புலையனானன்; கௌசிக ராஜன் (விசுவாமித்திரன்) நல்லொழுக்கத்தை மேற்கொண்டமையால் பிராமணனானனென்று புராணங்கள் கூறுவதை நம்மனோர் நன்கு சிந்தித்து நோக்குதல்வேண்டும். இவற்றைச் சிந்தித்து நோககுவோர்க்கு ஒழுக்கத்திற் றவறுவோர் இழிகுலத்தா ராவர்; தவறாதிருப்பவர் உயர்குலததா ராவரென்பது நன்கு விளங்கும்.

"ஓதலினன்றே வேதியர்க் கொழுக்கம்-பிராமணர்க்குஒழுக்கமானது வேதமோதுதலினும் சிறப்புடையதாம்" என்று ஒளவைப்பிராட்டியார் அருளிச்செய்திருப்பது யாதுணர்த்துகின்றது? தமக்குரிய ஒழுக்கங்கெடுமாறு நடப்பவர் கீழ்மக்களாய் விடுவரென்பதையன்றோ உணர்த்துகின்றது? ஒருவர் சாதியால் பெரியவராகார்; ஒழுக்கத்தாலேயே பெரியவராவரென்பதனை நம்மனோர்க் கறிவுறுத்தவே, ஒளவைப்பிராட்டியார் "ஓதலினன்றே வேதியர்க் கொழுக்கம்" என்றருளிச்செய்தனர்.

தத்தமக்குரிய ஒழுக்கங்களினின்றும் தவறுதொழுகுகின்றவர் நற்குடிப்பிறப்பு, தீர்க்காயுள், ஐசுவரியம், அழகு, காணியாட்சி, சொற்சொலவு, வித்தை, நோயின்மையென்னும் எட்டுவகைப் பயன்களையும் தவறுதடைவரென்று அறநூல் கூறுகின்றது. இது

"பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்விநோ யின்மை
இலக்கணத்தா லிவ்வெட்டு மெய்துப வென்றும்
ஒழுக்கம் பிழையா தவர்". என்று

ஆசாரக்கோவை கூறுவதால் நன்கு விளங்கும். நம்மனோர் தத்தமக்குரிய ஒழுககங்களிற் றவறு தொழுகி வருவாராயின், நற்குடிப்பிறப்பு முதலியவற்றைப் பெறுவதுடன், காலக்கிரமத்தில் எல்லாம் வல்ல இறைவனருளுக்கும் பாத்திரராய் மாறுவதில்லாத இன்பநிலையினை யடைவரென்பது நிச்சயமாம்.

ஒழுக்கமென்பது பார்ப்பார்க்கேயுரியது, மற்றவர்க்குரியதன்றென்று சிலர்கருதி, ஒழுக்கமுடையரா யிருப்பதொழிந்து, இழுக்குடையவராய் நடந்து வருகின்றனர்; அவ்வாறு நடந்துவருவது பெரும பாவச்செயலாம். பிறர்மனைவியரை விரும்புதல், கள்ளுண்டல், பிறர்பொருளை யபகரித்தல், சூதாடல், பிராணிகளைக் கொல்லுதல் என்பவற்றைச் செய்யாதிருப்பவர் யாவராயிருப்பினும், அவர் ஒழுக்கமுடைய ராவர்; இவ்வைந்தனுள் எதனையேனுஞ் செய்து வருபவர் ஒழுக்கமில்லாதவராவரென்பதனை நன்குணருதல்வேண்டும். இவ்வைந்து குற்றச் செயல்களுள் ஒன்றேனு மில்லாதிருப்பவரே ஒழுக்கமுடையாராவரென்பது உணரப்படுமாயின், ஒழுக்கமென்பது பார்ப்பார்க்கே யுரியது, மற்றவர்க்குரிய தன்றெனக் கருதுவது பிறழ்வான கொள்கையாமென்பது நன்கு விளங்கும்.

ஒழுக்கமில்லாதவர் உயர்வை யெய்துதல் ஒருவாற்றானும் அமையாததா யிருத்தலின், உலகத்தோடொத்து நடத்தலாகிய ஒழுக்கத்தினின்றும் பிறழாது வர நாம் இனியேனும் முயன்று மேன்மையடைவோமாக.

"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக் கேடும்-கற்றவேதத்தினை மறந்தானாயினும் அவ்வருணங்கெடாமையிற் பின்னும் அஃதோதிக்கொளலாம்; அந்தணனது உயர்ந்த வருணம் தன்னொழுக்கங் குன்றக்கெடும்" என்று திருக்குறள் கூறுவது இங்கு நன்குணர்தற் பாலதாம்.

சுக நூல்

15ம் பாடம்.

போஜன சம்பந்தமான சில விதிகள்:—

"தீயள வின்றித் தெரியான் பெரிதுண்ணி
னோயளவின்றிப் படும்".

இதன்பொருள்:—ஜீரண சக்தியைக் கருதாது, அறிவின்மையால் மிகுதியாக உண்பவன் அளவில்லாத நோயால் வருந்துவான்.

1. நாம் ஜீவித்திருப்பதற்காகச் சாப்பிடவேண்டும்.

2. சாப்பிடுவதற்காக மாத்திரம் ஜீவித்திருத்தல் கூடாது.

3. போஜனகாலங்களுக்கு இடையில் அநேகமாய் ஒன்றும் சாப்பிடா திருத்தல் நன்று.

4. கூடுமான வரையில் குறிப்பிட்ட நோங்களிலேலே சாப்பிடப் பழகுதல் சுகமாம்.

5. போஜனத்திற்குப் போகுமுன் கைகளைச் சவுக்காரத்தால் நன்றாகக் கழுவிச் சுத்தமாக்கிக் கொள்ளுதல்வேண்டும்.

6. போஜன காலத்தில் சந்தோஷமாக இருந்துகொண்டு, ஆகாரங்களை நன்றாக மென்று விழுங்குதல் வேண்டும்.

7. சாப்பிட்டெழுந்த உடனே வாய் கைகளைச் சுத்தமாகக் கழுவுதல் வேண்டும்.

8. சாப்பாட்டிற்குப் பிறகு சிறிதுநேரம் வரையில் கடினமான வேலைகளைச் செய்தலும், ஸ்நானம் செய்தலும் தவறு. கொஞ்சம் உலாவலாம்.

9. அடிக்கடி நம்மை நிறுத்துப் பார்த்துக்கொண்டு வந்தால், நம்முடைய தேகஸ்திதி நன்ருக விளங்கும்.

10. மித போஜனம், நீண்ட ஆயுளைத் தரும்.

11. கால்களை உஷ்ணமாகவும், தலையைக் குளிர்ச்சியாகவும் வைத்திருத்தல் வேண்டும்

12. மலச்சிக்கலுக்கு இடங்கொடுத்தல் தவறு. அதனல் சர்வ நோய்களும் வரும். கூடுமானவரையில் பிரதி தினமும் குறிப்பிட்ட நேரத்திலேயே மலத்தைக்கழித்தல் நன்று.

13. லர்கிரிபானம் விஷம்; சரீரத்துக்கும் விஷம்; புத்திக்கும் விஷம்.

16ம் பாடம்.

இரத்த ஓட்டம்:—

இரத்தமானது நமது சரீரத்திற்குள் எங்கும், பெரிதும் சிறிதுமான குழல்கள் வழியாகச் செல்லுகின்றது. அது செல்லாத இடம் இல்லை. எவ்வளவு மெல்லிய ஊசியைக் கொண்டும், நம்முடைய சரீரத்தின்மேல இலேசாக எவ்விடத்தில் குத்தினுலும், அங்கே நூற்றுக் கணக்கான குழல்கள் அறுந்து போம்.

இருதபமானது இரத்தத்தை அக்குழல்களில் ஓடச்செய்கின்றது. இரத்த ஓட்டத்திற்கு, அஃது ஒரு முக்கியமான கருவி. அது முஷ்டிப் பிரமாண முடையது; வெறுந் தசை. அது மிகவும் பலமாகச் சுருங்கும், விரியும்.

சுவாசம்:—

நம்முடைய வாய்க்குள் தொண்டையிலிருந்து ஒரு குழல் நுரையீரலுக்குச் செல்லுகின்றது. அது தான் சுவாசக்குழல். அஃதிரண்டு கிளைகளாகப் பிரிகின்றது. அவ்விரண்டு கிளைகளும் மேன்மேலும் அநேகம் சிறு கிளைகளாகப் பிரிகின்றன. சுவாசக் குழலை, தலைகீழாக நட்ட கிளைகளையுடைய தலைகீழான ஒருமாத்திற்கு ஒப்பிடலாம். ஒவ்வொரு சிறு கிளையினுடைய நுனியிலும் ஒரு கண்ணறை காணப்படும். அககண்ணறைகளோ கோடிக்கணக்காக இருக்கின்றன. அவற்றின் தொகுதிக்குத் தான் நுரையீரல் என்று பெயர். நமக்கு இரண்டு நுரையீரல்கள் உண்டு. மார்புக்குள்ளே வலது பக்கத்தில் ஒன்று, இடதுபக்கத்தில் மற்ருென்று. அவற்றின் மத்தியில் இருதயம்.

நாம் சுவாசம் விடுவதைக் கவனிப்போம்:—

1 வது நம்முடைய விலா எலும்புகள் எழும்புகின்றன:—

நுரையீரல்கள் இருக்கும் கூடு பெரிதாகின்றது. அதனுல் ஈரல்களில் காற்றுவந்து வியாபிக்கின்றது. ஒவ்வொரு கண்ணறையின் மீதும் சின்னஞ்சிறிய இரத்தக் குழல்கள் படர்ந்திருக்கின்றபடியால், கண்ணறைகளி லுள்ள காற்றின் பிராணவாயு, இரத்தக்குழலின் தோல்வழியாக இரத்தத்திற்குள் செல்லுகின்றது; இரத்தத்திலுள்ள கரியமிலவாயு, அதே தோல்வழியாகக் கண்ணறைக்குள் செல்லுகின்றது.

2 வது விலா எலும்புகள் தாழ்கின்றன:—

கூடுசிறிதாகி நுரை ஈரல்களை அமுக்குகின்றது. அவ்வீரல்களுக்குள்ளே இருக்கும் வாயு வெளியே தள்ளப்படுகின்றது. இவ்வாயு சாதாரணக் காற்றன்று. இதில் பிராணவாயு குறைவு, கரியமிலவாயு அதிகம். இக்காற்றையே மறுபடியும் சுவாசித்தால். மரணம் நேரிடாது. ஆனுல், இரத்தம் சுத்தமாவதற்கு வேண்டிய பிராணவாயு அதில் கிடையாதபடியால், அசௌக்கியம் ஏற்படும்.

இரத்தமானது, நுரையீரல்களில் தனக்குக்கிடைத்த பிராணவாயுவைக் கொண்டு என்ன செய்கின்றது?

ஜீரணமான போஜன பதார்த்தங்களினின்று குடல்வழியாக இரத்தத்துக்குக் கரி கிடைக்கின்றது என்பதை மறந்துவிடலாகாது. இரத்தமானது, தனக்குக் கிடைத்த கரியையும், பிராணவாயுவையும் சரீரத்தினுடைய சகல உறுப்புகளுக்கும்கொண்டு செல்கின்றது. அங்கங்கே பிராணவாயு கரியை எரிக்கின்றது. அதனுல் உஷ்ணம் உண்டு, பலம் உண்டு, ஜ்வாலைமாத்திரம் இல்லை. அந்தப் பலத்தைத்தான் நாம் எப்போதும் உபயோகிக்கின்றோம். நம்முடைய தேக உஷ்ணம் எத்தேசத்திலும், எக்காலத்திலும் மாறாமலிருப்பதற்கு, சரீரத்திற்குள்ளே கரி யெரிவதிஞலே உண்டாகும் சூடுதான் காரணம். நம்முடைய தேக உஷ்ணம் எப்போதும் 37 டிகிரி.

கரி எரியும்போது, கரியமிலவாயு உண்டாகுமல்லவா? இரத்தமானது அவ்வாயுவை நுரையீரலுக்குக் கொண்டுபோய் மேலே சொன்னவிதமாக வெளியே தள்ளிவிடுகின்றது.

ஆனபடியினுல் நுரையீரல்கள்

1. இரத்தத்திற்குப் பிராணவாயுவைக் கொடுக்கின்றன.
2. இரத்தத்தின் கரியமிலவாயுவை எடுத்துவிடுகின்றன.

17ம் பாடம்.

சுவாசம் (தொடர்ச்சி)

இப்போது பின்வரும் விஷயங்கள் தெளிவாக விளங்கும்:—

1. நீண்டநேரம், ஆழ்ந்து சுவாசிக்கவேண்டிய தவசியம்:—

நுரையீரலின் முக்கியமான பாகம் கண்ணறை; அக்கண்ணறைகளிலெல்லாம் காற்றுவந்து நிரம்பவேண்டியதல்லவா? எல்லாக் கண்ணறைகளிலும் காற்றுச் செல்லாவிட்டால், அவை கோடிக்கணக்காக இருப்பதின் பிரயோஜனம் என்ன?

ஆழ்ந்து சுவாசிக்காவிட்டால் சில கண்ணறைகளில் காற்றுச் செல்லாது. அவற்றைச் சுற்றியிருக்கும் இரத்தக் குழல்களிலுள்ள இரத்தத்திற்கு வேண்டிய பிராணவாயு எங்ஙனம் கிடைக்கும்? அங்கு இரத்தத்திலுள்ள கரியமிலவாயுவின் கதியென்ன?

மனிதர்கள் சாதாரணமாகச் சரியானபடி சுவாசிக்கிறதேயில்லை. சிரிப்பு, கொட்டாவி, இரைப்பு முதலியன உண்டாகும்போதுமாத்திரம் கண்ணறைகளெல்லாம் சரிவர வேலை செய்கின்றன. நம்மால் எப்போதும், சிரித்துக் கொண்டிருக்கவாவது, கொட்டாவி விடவாவது முடியாது. ஆகலால் நன்றாக ஈரல்கள் நிறைய ஆழ்ந்து சுவாசிக்கப் பழகுதல் வேண்டும். மேலும் அப்பழக்கத்தினாலே நம்முடைய ஈரல்களில் சதா சுத்தமானகாற்றே நடமாடிக்கொண்டிருக்குமல்லவா?

2. மூக்கினாலேயே சுவாசிக்கவேண்டிய தவசியம்:—

கண்ணறைகளும், அவற்றிற்குக் காற்றைக் கொண்டுபோகும் சிறு குழல்களும் மிகவும் சிறியன, மிகவும் நுட்பமானவை. தூசிகள் அக்குழல்களை அடைத்துவிடும்; அல்லது அவற்றைக் காயப்படுத்திவிடும். சாதாரணக் காற்றிலே அநேகமாய்த் தூசிகள் உண்டு. அக்காற்று மூக்கின்வழியாக உட்சென்றால், அதிலுள்ள தூசி, சூக்ஷ்மமான கிருமி இவைகளெல்லாம், மூக்கினுள்ளே வளைவான இடங்களிலும், ரோமங்களுக்குள்ளேயும் படிந்துவிடும்; மேலும் அக்காற்று கொஞ்சம் உஷ்ணமாகி ஈரலுக்குச் செல்லும். அதனால் சளி முதலிய ஈரல் சம்பந்தமான அசௌக்கியங்கள் ஏற்படா.

3. சுத்தமான காற்றையே சுவாசிக்க வேண்டியதவசியம்.

இது சுகநூலின் முக்கியமான விதி. கெட்டகாற்றைச் சுவாசித்துக் கொண்டே எங்ஙனம் சௌக்கியமாக இருக்கமுடியும்? மனிதன் காற்றில் ஜீவிக்கிறதுமல்லாமல், காற்றாலே ஜீவிக்கின்றான். அதனால் அவனுக்கு கனதிரவ போஜன பதார்த்தங்கள் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு காற்றும் அவசியமாம். ஆகையால் கூடியவரையில் சுத்தமானகாற்றையே உபயோகித்தல்நன்றல்லவா?

ப்ரொபஸர் - சுப்ரமணிய ஐயர், புதுச்சேரி.

217
160957

குசேலோ பாக்கியான வசனம்.

(முன் தொடர்ச்சி.)

துவாரபாலகர் குசேல முனிவரை நோக்கி, வேதங்களனைத்தும் ஓதியுணர்ந்து, உண்மை நிலையினையடைந்து, பவச்சிறையை யொழித்த பண்ணவரே! உமது வரவால் நாங்கள் எங்களது குறையனைத்தும் நீங்கி மகிழ்ச்சி யுடையவரானோம்; தங்களுடைய கல்வி யறிவினருமையையும், தவச்செல்வத்தையும், மனத்தூய்மையையும், குற்றமில்லாமையையும் மயக்கமுடைய உலகத்தார் பகுத்துணர்வது எவ்வாறாம்? அறிவிலாதிருப்பவராகிய இவர்கள் அறியாமையாற் கூறிய பழிமொழிகளைத் தங்களுடைய மனத்திற்கொள்ளாதிருக்கும்படி வேண்டுகின்றனம். அவற்றைத் தாங்கள் சிந்தனை செய்வீர்களாயின், அவர்கள் துன்பக் கடலில் விழுந்து மீளுதலில்லாது வருந்த முறுவர். கங்கை முதலிய புண்ணிய நதிகளில் மூழ்குதல், கோதானம் பூதான முதலிய தானங்களைச் செய்தல், அளவிறந்த யாகங்களைச்செய்தல் என்னுமிவற்றால் வரும் பயன்களெல்லாம் உமது தரிசனமொன்றனாலேயே யுண்டாவனவாம். (இறப்பு நிகழ்வு எதிர் வென்னும்) காலமூன்றையு முணர்ந்திருக்கின்ற கர்த்தரே! நமஸ்காரம். வேதச்செல்வரே! நமஸ்காரம். மெய்ஞ்ஞான முடையவரே! நமஸ்காரம். சிரேட்டமானவரே! நமஸ்காரம் எங்கள் மீது கருணை செய்கின்ற பண்ணவரே! நமஸ்காரம். தேவரீர் சிறிது போது இங்கெழுந்தருளி யிருந்தால், யாங்கள் உள்ளே சென்று கண்ணபிரானுக்குத் தேவரீர் வருகையைத் தெரிவித்து வருகின்றோமென்று கூறி, அவரை நமஸ்காரஞ் செய்தெழுந்து, அவ்விடத்தினின்றும் நீங்கி, பொன்னாற் செய்து இரத்தினங்களை மிகுதியாக அமைத்திழைத்துள்ள எழுபத்திரண்டு வாயில்களையும் விரைவாகக்கடந்து சென்று, முடிமன்னர் நெருங்கியுள்ள கொலுமண்டபத்திற்கு வந்து சேர்ந்தனர்; அங்கவர்கள் கண்ணபிரானைக் காணாது அங்குள்ளாரை நோக்கி, நமது கண்ணபிரான் எவ்விடத் திருக்கின்றனரென்று வினவினர். அதற்கவர்கள் அவர் அந்தப்புரத்தி லிருக்கின்றாரென்று கூறினார். உடனே அத் துவாரபாலகர் அந்தப்புரத்திற்கு ஓடுகின்றனரென்று கூறுமாறு விரைவாகச் சென்று அங்குப் பெண்கள் காவல் செய்திருக்கின்ற தலைவாயிலையடைந்து நின்றனர். இவர்களிவ்வாறு நின்ற சமயத்தில் மேக மண்டலத்தை யளா

விய மதில் சூழ்ந்ததாய், பொன்னாற் செய்து, இரத்தினங்களிழைத்து விளங்குகின்ற பலகணிகளையும் வாயில்களையும் உடையதாய், இரத்தின கசிதமாய் விளங்குகின்ற அந்தப் புரத்திலே சந்திரகாந்தக் கற்களைப் பதித்துக் கட்டிய சுவர்களில் சந்தனம், பச்சைக்கர்ப்பூரம், கஸ்தூரி, குங்குமப்பூ முதலிய வாசனைத் திரவியங்களைப் பனி நீர் வார்த்துக் குழைத்துப்பூசி, அகிற்புகையூட்டி, தரையில் இரத்தினக் கம்பளம் விரித்து, இரத்தினகசிதமாய்ப் பேரழகுற்று விளங்குகின்ற தமது மாளிகையிலே கண்ணபிரான் பொன்னாற் செய்து பல வகையாய இரத்தினங்களிழைத்துவிளங்கும் பெரிய கட்டிலின் மீது இலவம்பஞ்சு மெத்தை, செம்பஞ்சு மெத்தை, வெண்பஞ்சு மெத்தை, மயிர் மெத்தை, அன்னத்தூவி மெத்தை யென்பனவற்றை முறையே ஒன்றன்மீ தொன்றாக அடுக்கி, மிக மிருதுவாயுள்ள வெண்ணிறப் பட்டாடையை விரித்தமைத்துள்ள சயனத்தின் மீது பேரழகுள்ள பணிப்பெண்களுள், சிலர் வெண் சாமரையையும் சாந்தாற்றியையும் சிற்றாலவட்டத்தையும் வீச, ஒருத்தி வீணை வாசிக்க, மற்றொருத்தி பச்சைக்கர்ப்பூரம், இலவங்கம், ஏலமுதலிய முகவாசப் பொருள்களைச் சேர்த்துப்பாகடை(பாக்கு வெற்றிலை)யைத்தனது கையை நீட்டிக் கொடுக்க,இன்னொருத்தி பொற்படியகத்தை யெடுத்தேந்தி நிற்க, வேறொருத்தி தம்முகத்திற்கு நேரே கண்ணாடி யெடுத்துக்காட்ட, பின்னொருத்தி மோந்து கொண்டு றங்கப் பனிநீர் தெளித்த பூச்செண்டினைப் பணிவாக எடுத்துத் தமது கரத்திற்றர, வேறொருத்தி பொற்கரகநீரைக் கையிற்றாங்கி நிற்க, இன்னொருத்தி பாதுகையைத் தாங்கி நிற்க, பின்னொருத்தி நறுமணப் புகையையுண்டாக்க, உருக்குமணிப் பிராட்டியாரது தொடை மீது திருமுடியைவைத்து, சத்தியபாமையினது தொடையின்மீது திருவடிகளை வைத்துச் சயனித்துக் கொண்டிருந்தனர். அப்போது வாயிலின்கண் குசேலரது வரவைக் கண்ணபிரானுக்குத் தெரிவிக்குமாறு வந்து சேர்ந்த துவாரபாலகர்கள் அங்குக்காவல் செய்துள்ள பெண்களது முகத்தை நோக்கி நீவிர் கண்ணபிரானுக்கு எமதுவரவைத் தெரிவிப்பீராக வென்று கூறினார்கள். அப்பெண்கள் விரைந்து உள்ளே சென்று அங்குச் சயனித்திருக்கும் கண்ண பிரானிடத்துத் துவாரபாலகர்வந்திருத்தலைக்கூறினார்கள். கண்ணபிரான் அதனைக்கேட்டெழுந் துட்கார்ந்து, அவர்கள் வரக்கடவாரகவென்று கூறினார். அப்பெண்கள் அத் துவார பாலகர்களுக்கு உள்ளே வரு

மாறு உத்தரவாயிற்றென்று கூறவே, அவர்கள் உள்ளே சென்று தாரகை(நட்சத்திர)க் கூட்டத்தின் நடுவே விளங்கும் சந்திரனைப் போல மாதர் கூட்டத்தினடுவே விளங்குங் கண்ணபிரானைக்கண்டனர்; கண்டவுடனே உள்ளே ஆநந்தம் பொங்கியெழத் தலைமீது கரங்களைக் கூப்பிப் பூமியில் தண்டம் போல் விழுந்து நமஸ்கரித்தெழுந்து, தம்மாடைகளை ஒடுக்கிக்கொண்டு வணக்கமாக நின்றனர். அவ்வாறு தம்மெதிரே நிற்கும் துவாரபாலகர்களைக் கண்ணபிரான் நோக்கி, நீவிர் இங்கு வந்த காரியம் யாது? உரையுங்களென்று கூறினர். கூறவே, அவர்கள் வேதமுதல்வனே! நமஸ்காரம்; சந்திரகுல தீபமே! நமஸ்காரம்; இந்திரன் முதலிய இறைவர்கள் காண்பதற் கரியானே! நமஸ்காரம்; தாமரைக்கண்ணா! நமஸ்காரம் ; பகைவராகிய யானைகளுக்கு ஆண் சிங்கம் போன்றிருப்பவனே! நமஸ்காரம்; துவாரகைக்கிறைவனே! நமஸ்காரம்; ஐயனே! ஒரு பிராமணர் தேவரீரைத் தரிசிக்குமாறு வந்திருக்கின்றார். அவர் முற்காலத்தில் தங்களோடு வித்தியாப்பியாசஞ் செய்தவராம்; தங்களுடன் பெரு நட்புக்கொண்டிருந்தவராம்; அவர் தம்முடைய பெயர் குசேலரென்று கூறினர்.

இளைத்து எலும்புகளெழுந்து புறத்தே தோன்றுமுடம்பினையுடைய அவர் தேவரீர் மீது வைத்துள்ள பத்தியை யளவு செய்துரைப்பது முடியாதென்று தோன்றுகின்றது. அவர் தங்களைத் தரிசிக்குமாறு இப்போது அரண்மனையின் தலைவாயிலின்கண் வந்து காத்துக்கொண்டிருக்கின்றனர். இதுவே யாங்கள் செய்யும் விண்ணப்பமாகுமென்று கூறினர்கள். அத்துவாரபாலகர் அவ்வாறு கூறியதைக் கேட்ட கண்ணபிரான் உவகைமீக்கூற்று, முகமலர்ச்சிகொண்டு, அவர் மீது தாம் வைத்துள்ள கருணை பொங்கி வழியாநிற்க, அவர்களை நோக்கி, நீவிர் விரைந்து சென்று இப்போது நமது அரண்மனையின் தலைவாயிலில் வந்து காத்துக் கொண்டிருக்கின்ற அத் தவத்தலைவனை யிங்கழைத்துக் கொண்டு வாருங்களென்று கூறினர். அதனைக்கேட்ட அத்துவாரபாலகர் பெரு மகிழ்ச்சியடைந்து மனவாட்டம் நீங்கி வாயில்கள் பலவற்றையும் கடந்து சென்று, தாம் காவல்செய்யும் தலைவாயிலையடைந்து, அங்குத் தமது வரவையெதிர்பார்த்திருக்கும் குசேலமா முனிவரை யடுத்து, அன்பானது அதிகரிக்க, தண்டம் போல் விழுந்து வணங்கி, தவத்திற்சிறந்தவரே! நமஸ்காரம்; வே

தியர்குலதீபமே! நமஸ்காரம்; பிறவிக்கடலைக்கடந்தபெரியோரே! நமஸ்காரம்; கண்ணபிரானுக்கு நல்ல நட்பாயிருப்பவரே! நமஸ்காரம் என்று பலவாறு துதித்து, யாங்கள் வாயில்கள் பலவற்றையுங் கடந்து சென்று, கொலுமண்டபத்தில் கண்ணபிரானெழுந்தருளியிராமையால், அங்குள்ள மாதர்கள் வாயிலாக அவர் அந்தப்புரத்திலிருக்கின்றாரென்றுணர்ந்து, அங்குப்பிடிகள் (பெண்யானைகள்) பல சூழக் களிறு(ஆண் யானை)இருப்பது போலப் பெண்கள் பலர் சூழக்கட்டிலின்மீதுசயனித்திருக்குங்கண்ணபிரானைக்கண்டு, அவரிடத்துத் தேவரீரது வரவைத் தெரிவித்தனம். அதனைக் கேட்டபோது அவர்க்குண்டாகிய களிப்பை யென்னென்று சொல்லுவதாம்; அவர் அப்போதங்கனுபவித்திருந்த சுகபோகமனைத்தையும் மறந்துவிட்டனர். உலகத்தில் நட்பினும் சிறந்தது யாதிருக்கின்றது?

தேவரீர் வரவை யாங்கள் சென்றறிவித்தபோது அவர் தனித்திருந்ததொரு குழந்தை தன் தாயினது வரவைக்கேட்ட அளவில் அன்புமிக்குப் பெருமகிழ்ச்சி யடைவதுபோல அன்புமிக்குப் பெருமகிழ்ச்சி யடைந்து, போயழைத்திடுமி னின்னே, போயழைத்திடுமி னின்னே, போயழைத்திடுமி னின்னே (சென்றழையுங்களிப்போதே) என்று விரைவுப் பொருளில் மும்முறையடுக்காகக் கூறினார்: ஒன்றனை விரைவுப்பொருளில் மும்முறைக்குமே லடுக்காகக் கூறுவதற்கு இலக்கணமில்லாமையைக் கருதி, இம்மூன்று முறைக்குமே லதிகமாகக் கூறாதிருந்தனர். தவச்சிரேட்டரே! அந்த நிழந்தனவற்றைப் பலப்பலவாகச் சொல்லுவதால் என்னுவதாம்? தேவரீர் இங்குத் தாமதித்திருத்தல் தகுதியாகாது. தேவரீர் விரைவாக வாராவிட்டால், அவரிங்கு வந்துவிடுவார். ஆதலால் முனிசிரேட்டரே! கண்ணபிரானுக்கு உவகையுண்டாக்குதற் பொருட்டு எழுந்தருளுவீராக வென்று கூறிக் கைகுவித்து வணங்கினார்கள்; அதனைக்கேட்ட குசேலமாமுனிவர் கண்ணபிரானைத் தரிசிக்க உள்ளே விரைவாக நடந்து செல்வாராயினர்.

(வரும்).

(Copy Right Reserved)

Extracts From SWAMI VIVEKANANDA'S Inspired Talks.

விவேகானந்த சுவாமிகளது அருள்வாக்கியத் திரட்டு.

நன்மை உண்மையை யடுத்துள்ளது; ஆனால் அது உண்மையாகாது. தீமையால் கலக்கமுறாமல் நிற்கக் கற்றுக் கொண்ட பின்னர் நன்மையால் சந்தோஷப்படாம லிருக்க நாம் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். நன்மை தீமை இவ்விரண்டிற்கும் நாம் அதீதமெனக் காணல் வேண்டும். நன்மை தீமைகளைத் திருத்தும் வகையை ஓர்ந்து அவை இரண்டும் அவசியமெனக் ாணல்வேண்டும்.

துவைதமாகிய எண்ணம் பூர்வீக பாரசீகரிடத்திருந்து வந்துள்ளது. உண்மையில் நன்மையும் தீமையும் ஒன்றேயாகி நமது மனத்தை இருப்பிடமாய்க்கொண்டுள்ளன. மனது சமத்துவத்தை யடையும்பொழுது நன்மை தீமைகளால் அது தாக்கப்படுவதில்லை.

பந்தம் முற்றிலும் அறுமாயின் அப்பொழுது நன்மையாகிலும், தீமையாகிலும் மனத்தைத் தாக்காது. நாம் துக்கநிவர்த்தியாகிய நிலையிலும் பரமானந்தப் பிராப்தியிலும் சுகித்துநிற்போம். தீமையானது இரும்பால் செய்தவிலங்கு, நன்மை பொன்னாலாய விலங்குமாகும். ஆகவே இவ்விரண்டும் விலங்கேயாகும். விடுதலையடைந்திரு. உனக்குப் பந்தமில்லையென ஐயந்திரிபறத் தெரிந்துகொள். இரும்புவிலங்கின் கட்டைத் தளர்த்தப் பொன் விலங்கைக் கைப்பற்று. பின்னர் இரண்டையும் உதறித்தள்ளு.

தீமை யென்னும் முள்ளானது நமது சதையில் தைத்துக் கொண்டிருக்கிறது. இந்த முள் எந்தச் செடியினுடையதோ அச்செடியினின்றுமே இன்னொரு முள்ளை யெடுத்துத் தைத்த முள்ளைப் பிடுங்கவேண்டும். பின்னர் இவ்விரண்டையும் எறிந்துவிட்டுச் சுயேச்சையாயிரு.

இவ்வுலகின்கண் எப்பொழுதும் ஈகையாளியின் அந்தஸ்தை வகித்துநில். எல்லாவற்றையும் கொடுத்துவிடு; அதற்குப் பதிலொன்றையுங் கோராதே. பிரேமையைச் செலுத்து. யாவர்க்கும் உதவியைச் செய்; சிஸ்ருஷை பண்ணு; உன்னால் இயன்ற எந்த அற்பப் பொருளையும் கொடுத்துவிடு. ஆனால் ஒருபொருளைக் கொடு

த்து அதற்கீடாக இன்னொருபொருளை வாங்கிக்கொள்ளுந் தன்மையைத் தவிர். கொடுக்கும்போது மாத்திரம் யாதொரு நிபந்தனையுங் கூருதே. உன்மேலும் மற்றவர்களும் யாதொரு நிபந்தனையும் சுமத்தமாட்டார்கள். கடவுள் நமக்கு எவ்வளவு உதாரத்துவத்துடன் கொடுக்கிருரோ அவ்வளவு உதாரத்துடன் நாமும் கொடுப்போமாக.

கடவுள்தான் தாதா. உலகிலுள்ள யாவரும் கடை விற்கிறவர்கள் போல்வராவர். கடவுளிடமிருந்து ஒரு செக் (Cheque) அஃதாவது உண்டிபெற்றுக் கொண்டால் அஃது எங்குச் செலாமணியாகும். கடவுள் தெளிவாக உணரக் கூடாததும் வாக்கிறந்ததுமான பிரேமரசமாம்; ஸ்வானுபவத்தில் ஓர்ந்துணரக் கூடுமேயன்றி இலக்ஷணங்களுடன் எடுத்துரைக்கப் படுவதன்று.

போலீஸ்காரரால் பின் தொடரப்பட்ட மனிதனைப்போல நாம் இவ்வுலகின்கண் ஓடிக்கொண் டிருக்கிறோம். இதனுல் உலகத்தின் சௌந்தரியம் நமக்குப் புலப்படுவதில்லை. நம்மைப் பின்தொடர்ந்து வரும் இந்தப்பயம் யாவும் சடவஸ்துக்களிடத்தில் நமக்கிருக்கும் நம்பிக்கையால் உண்டாயிருக்கிறது. சடப்பொருளின் இருக்கைக்கு அதனை ஓர்ந்துணரும் மனத்தின் சந்நிதானமே ஹேதுவாக இருக்கிறது. நாம் பார்க்கும்யாவும் சடப்பொருள்களினின்றும் ஊற்றுநீர் போல் வெளிவரும் கடவுளேயாம்.

திராக்ஷக்கொடியில் திராக்ஷக்கொலேகள் அனேகமாக இருப்பதுபோல காலவடைவில் ஏசுகிருஸ்துக்கள் பலர் அவதரிப்பார்கள். அப்பொழுது லீலே முற்றுப்பெறும். எல்லோரும்மறைந்து விடுவார்கள். ஒரு கொப்பரையில் தண்ணீர் கொதிக்க ஆரம்பிக்கும் பொழுது முதலில் ஒரு குமிழி, பின்னர் இன்னொரு குமிழி, பின்னர் இன்னென்று, இவ்விதமாகக் குமிழிகள் அதிகமதிகமாகிக் கொதிகிளம்பி நீராவியாகித் தண்ணீர் மறைந்துவிடுகின்றது. இதுவரை உலகமீன்ற குமிழிகளில் புத்தரும், கிறிஸ்துவும் இரண்டு பெரியகுமிழிகளாக மதிக்கப் படுகின்றனர். மோஸஸ்என்பவர் ஒரு சிறியகுமிழி. இதைவிடப்பெரியபெரிய குமிழிகளும்தோன்றின.— காலஞ்செல்லச் செல்ல எல்லாம் குமிழிகளாகி மறைந்துவிடும். ஆனல் சிருஷ்டி, எப்பொழுதும் புதிதாகவேயிருந்து, புதுஜலத்தை உண்டுபண்ணி முன்போலக் குமிழிகளை உண்டாகும்படி செய்து மறையும்படி செய்யும்.

(வரும்).

பெ.மாணிக்கசாமி முதலியார், பீ. ஏ.

உத்தம நீதி பத்து.

[இவை ஒருவரது தினசரிக் குறிப்பில் எழுதப்பட்டிருந்தன]

தினமொரு முறையிதைச் செவ்வையாய்ப் படித்து
மனத்தினுட் கொண்டு வாழ்வாய் நலனே.

1. ஆதிபகவனைத் தொழுது, அவனை அறிந்து, அவனை அடைதலையே உனது முதற் கடமையாகக் கொள். ஸத்யமும் தர்மமும் உனது முதற் பொருள்கள். அவற்றை முதலாகக் கொண்டு பிறவற்றை விருத்திசெய்.

2. அடக்கம், அன்பு, இரக்கம், பொறுமை, சாந்த முதலிய குணங்கள் மனிதனுக்கு மிகவும் இன்பம் பயக்கத்தக்கன. அவற்றை உனது வாழ்க்கையிற் கைக்கொண்டு, மேலும் மேலும் அவற்றை அபிவிர்த்தி செய். பக்தவத்சலனாகிய கடவுளின் திருவடிகளை நீ அடைந்து உய்தற்கும் இவை மிகச் சிறந்த சாதனங்களாம்.

3. ஏழைகளுக்கும் அநாதைகளுக்கும் உன்னால் இயன்றவரை உதவி செய்வாயாக. ஏனைய பிராணிகளுக்கு உன்னால் இயன்றவரை உதவிபுரிவதோடு, அவற்றை வருத்தாமலும் இருப்பாயாக.

4. "அறத்தால் வருவதே யின்பம்": ஆதலால் அறத்தினின்று என்றும் வழுவேல். ஏனெனில், "அறத்தின திறுதி வாழ்நாட் கிறுதி; அஃது உறுதி" யாம்.

5. என்றும் உண்மையே பேசுக. ஸத்யம் வத; தர்மம்சர; என்பன வேத வாக்யங்களாம்.

6. எவரிடம் பேசினாலும் இனிமையாகவும், பணிவாகவும், சாந்தமாகவும் பேசுக. "கீழோராயினும் தாழவுரை". பயனற்ற வார்த்தை ஒன்றாயினும் பேசேல்.

7. வன்சொல் என்றும் வழங்கேல்.

8. பிறன் பொருளை என்றும் விரும்பேல்.

9. உனக்கு உள்ளதே பெரிதென மதித்துத் திருப்தி கொண்டு சந்தோஷமாக வாழ்க. "போதுமென்ற மனமே பொன் செயு மருந்து".

10. எல்லா உயிர்கள் மீதும் அன்பு செலுத்துதலே ஒருவனுக்கு மேலான இன்பந் தருவதாம். சும்மா விருக்கும் நேரங்களில் சிவநாம ஹரிநாம ஸ்மரணை செய்துகொண் டிருப்பாயாக.

நீதி நூல்விளக்கம்.

(1-வது தெய்வ முண்டெனல்).

The omnipresence of God.

கோபுரமொன்றைப் பார்ப்போமானா லதை உண்டுபண்ணினவன் ஒருவனுள னென்பதுபோலவும், பொன் அல்லது இரத்னங்களினாற் செய்த ஆபரணமொன்றைப் பார்ப்போமானால் அதைச் செய்த தட்டான் (பொற்கொல்லன்) ஒருவன் உண்டென்பதுபோலவும், நாம் தரித்துக்கொள்ளும் ஆடையை (வஸ்திரத்தை) நெய்தவனொருவனுள னென்பதுபோலவும், இவ்வண்டபிண்ட சராசரங்களனைத்து முண்டுபண்ணினவ னொருவனுள னென்பது பிரத்யக்ஷமாய் விளங்கும்.

சித்திரம் ஒருவனெழுதாது தானே அமையாது; பாவையானது ஒருவனாட்டாது தானே ஆடாது; வீணையானது ஒருவன் மீட்டாது தானே சப்தமிடாது என்பனவற்றைப்போல மேற்கூறிய சராசரங்களனைத்திலும் நடக்கும் வைபவங்கள் அனைத்தும் ஒருவனிருந்து நடத்துகின்றானென்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்று விளங்குகின்றதல்லவா?

வாசனை வீசுமிடத்துப் புஷ்பமுண்டென்றும், புகையுண்டாகுமிடத்துத் தீயுண்டென்றும், மரங்கள் அசையுமிடத்துக் காற்றுண்டென்றுஞ் சொல்வதுபோல கடவுள் உண்டென்னு முண்மைக்கு உலகமே சாக்ஷியாகும்.

ஆகாயம், காற்று, உயிர் முதலியவற்றை நாம் கண்ணால் பார்க்க முடியாது போனாலும், அவை உண்டென்று சொல்லுவது போலத் தெய்வமு உண்டென்பது மெய்யே. மேகமில்லாமல் மழையும், வயலில்லாமல் விளைவும், சூரியனில்லாமல் ஒளியும், ராஜனில்லாமற் காவலும், தாயில்லாமற் பிள்ளையும்—ஜனனமும், விதையில்லாமல் விருக்ஷங்களும்-அவற்றின் பலன்களும், விளக்கில்லாமற் காந்தியும்-அனலும், முத்து-எள் முதலியவைகளின்றி எண்ணெய்யுமில்லை யென்பது போலத் தெய்வமொன்றில்லாமல் உலகமில்லை.

மூக்கன்றி, வாய், கண், காதுகள் வாசனையை அறியமாட்டா; வாயன்றி ஏனைய புலன்கள் பேசவறியா. குருடனால், சூரியனது ஒளியைப் பார்க்க முடியாது. செவிடனால், சமுத்திர ஓசையைக் கேட்க முடியாது. பித்தர்களோ, தம்பார்வையிலேயே வருந்தீங்கை யறியமாட்டார்கள் என்பனவற்றைப் போல, ஞானக்கண் படையாதவனால் தெய்வத்தைப் பார்க்கவாவது, அஃதுளதென்ற தோற்றந் தெரியவாவது கூடாததேயாம். அன்றியும், தெய்வ முண்டென்னும் உண்மைக்கு உதாரணமாக இங்கு ஒரு கதை வரைவாம். (இன்னும் வரும்).

E. S. சிவராமலிங்கம் பிள்ளை.

விவேக சந்திரிகா.

பழம் நிறைந்த மரங்கள் வளைந்திருக்கின்றன. அது போல் நீ பெரியவனென்று மதிக்கப்பட விரும்பினால் எல்லோருக்கும் அடங்கி நட.

சிறு பிள்ளைகளுடைய மனம் ஒரே தன்மையாய் ஒன்றாயிருக்கிறது; கலியாணமானால் மனதிற் பாதியைப்பெண்ஜாதி கொள்ளை கொள்ளுகிறாள்; பிள்ளை பெண்கள் பிறந்தால் கால் வாசி மனது அவர்களிடம் செல்லுகின்றது; மீதியிருக்கும் கால் பந்து தாய், தந்தை, துணி, கீர்த்தி, கௌரவம், கர்வம் முதலிய விஷயங்களிற் செல்லுகின்றது. ஆதலின் அப்போது அவன் கடவுளைத்தியானிப்பதற்கு மனமில்லாத தரித்திரனாகிறான். ஆதலின் சிறுபிள்ளையாயிருக்கும் போதே பகவானைத் துதிக்கவேண்டும்; அவரிடம் மனத்தை யொப்புவிக்கவேண்டும்; வயது முதிர்ந்தால் ஈசுவரத்தியானம் செய்வது கஷ்டமாய் முடியும்.

புகைச்சுருட்டு பிடிப்பதும் பொடிபோடுவதும் அனாசாரம். எந்த சமயத்தாரும் எந்த ஜாதியாரும் மேற் கூறிய துர்குணங்களினின்றும் விலகிக்கொள்வது நன்று. இதனால் வீண்செலவாவதுடன் அருகேயிருக்கும் பெரியோர்களால் கெட்டவனென்றும் மதிக்கப்படுகிறோம். காலையில் எழுந்தவுடன் முகத்தைச் சுத்த ஜலத்தாலலம்பி கண்களைத் துடைத்துக் கொள்ளல்வேண்டும். இவ்விதம் செய்யாமல் அநேகர் உடுப்பு மட்டும் தரித்துக்கொண்டு ஒய்யாரமாய்த் தெருவில் வந்து விடுகிறார்கள். "சுத்ததேகம் சுகத்துக்காதாரம்" என்பதை ஒவ்வொருவம் உணரவேண்டியது. ஒருகண்ணாடியில் அழுக்குப் படிந்தால் அதனை உடனே துடைக்கிறோமன்றோ? அதுபோல் ஆத்மாவஸிக்கும் படியான இச்சரீரத்தைப் பிரதிதினமும் ஸ்நானத்தால் சுத்தம் செய்யவேண்டியது அவசியம். தேகத்தில் அழுக்கடைவதால் சொறி, சிரங்குகளும் இன்னும் பல விதமான வியாதிகளும் தோன்றும்; அன்னியர்கள் நம்மிடம் வெறுப்புக் கொள்ளுகிறார்கள்; நமது சாஸ்திரங்களெல்லாம் சுகத்தை யனுசரித்தே எழுதப்பட்டிருக்கின்றன.

ஓர் ஊரில் சிவன் கோயிலில் ஒரு யோகி பகவத்தியானம் செய்துகொண்டிருந்தார். மத்தியான வேளையில் பிக்ஷைக்காகச் சிறிது நேரம் வெளியே போயிருப்பதும் காலையில் ஸ்நானத்துக்

காகச் சிறிது நேரம் வெளியேபோயிருப்பதும் தவிர மற்றக்காலங் களிலெல்லாம் அவர் கோயிலிலேயே உட்கார்ந்துகொண் டிருந் தார். அவரிடம் பக்திகொண்டு கோயில் தர்மகர்த்தா தினமொன் றுக்கு ஆலயமடைப்பள்ளியிலிருந்து ஒரு வேளை அன்னம் அவ ருக்குக்கொடுக்கும்படி உத்தரவு செய்தார். இவ்வாறாகச்சிலகாலம் நடந்தேறியது. பிறகு தர்மகர்த்தா தேகவியோக மானார். அவரு டைய புத்திரன் கோயில் விசாரணைக் கர்த்தனாக அமர்ந்தான். அவன் இங்கிலீஷ் படிப்பாளி யாதலால் சீர் திருத்தம் செய்வதில் திருஷ்டியுள்ளவன்; புதுமாதிரியாக அநேக ஏற்பாடுகளைச் செய்த போது யோகிக்குக் கொடுத்து வந்த உணவைக்கொடாமல் நிறு த்திவிடும்படி உத்தரவு செய்தான். யோகியோ இவனை லக்ஷியம் செய்யாமல் வழக்கம் போல் பிக்ஷைக்குச்சென்று கோயிலுக்கு வந்து ஸதாகாலமும் ஈசுவரத்தியானம் செய்து வந்தார்.

இதைக்கண்டு புதிய தர்மகர்த்தா கோபம் கொண்டு தம்மை எல்லோரும் வணங்குகின்றார்கள்; இந்தச் சோம்பேறிப் பயலாகிய யோகிமாத்திரம் லக்ஷியம் செய்யாமலிருக்கிறானென்று அவரிடம் சென்று "ஓய்! நீர் என் உம்முடைய அருமையான காலத்தை யெல்லாம் இப்படி வீணாகக் கழித்துக்கொண்டிருக்கிறீர்; வேலை செய்தால் கஷ்ட முண்டாகுமென்று இந்த வேஷம் போட்டீரோ" வென்றான். இவன் சொன்னதைக்கேட்ட யோகி 'ஐயா' உட்கா ருங்கள்" என்றார்; அவ்வாறே தர்மகர்த்தா உட்கார்ந்து கொண் டான். 5-நிமிஷம் ஆயிற்று; யோகி கண்ணை மூடிக்கொண்டு ஜபம் செய்தாரேயன்றி மறுமொழி சொல்லவில்லை. தர்மகர்த்தா எழுந்து போகத்தொடங்கினார். யோகி "ஐயா! சற்று உட்காருங் கள்" என்றார். அவ்வாறே தர்மகர்த்தா உட்கார்ந்தார். மூன்று நிமிஷ மாயிற்று. இன்னும் யோகி கண்ணைத்திறக்க வில்லை. யாதொரு கவலையுமில்லாமல் உற்சாகமாய் யோகம் செய்து கொண்டிருந்தார். தர்மகர்த்தா 'அடா அப்பா; என்னால் இனி ஒரு நிமிஷம் கூட உட் கார முடியாது; இந்த யோகி எத்தனையோ வருஷங்களாக உட் கார்ந்திருப்பது ஆச்சரியம்! இது மிகுந்த கஷ்ட" மென்று அவ ருக்குத் தினமொன்றுக்கு இரண்டு வேளையன்னம் கொடுக்கும்படி கட்டளையிட்டான். "சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற திறமரிது" என்று நம் தாயுமானார் கூறியிருப்பதை இங்கு ஞாப கப்படுத்திக் கொள்ளவேண்டும்.

பண்டிட் T. K. இராம பத்ர சர்மா.

பூங்காவனம்.

(முன் தொடர்ச்சி).

நான் புறப்பட முன் ஆலோசனை இல்லாதவளும், பெலனற்றவளும், புத்தியற்றவளுமாயிருந்தாலும், நான் குற்றமற்றவளென்று கடவுளுக்குமுன்பாகச் சொல்லுகிறேனென்றனள். அதனைக்கேட்டு மங்களம் ஓ! பூங்காவனமே! தயவு செய்து வீணாகக் கடவுளின் பெயரை இங்கே கூப்பிடாதிருவென்றாள். அவள் மூர்க்கமாய்த் தன் இனத்தவளைப் பார்த்து அடி சண்டாளியே! என்னைக்குற்றஞ் சாற்றத்துணிந்து வந்து நிற்கின்றாயா? என்று கூறினாள். மங்களம் பயந்து சிறிது பின்வாங்கப், பூங்காவனம் அவளைப் பார்த்து உன்வீட்டில் அடைக்கலம் புகமாட்டேன்; நீ எனக்கு விரோதமாய் யாதாமொரு குற்றமுஞ் செய்யவில்லையென்று உன்மார்பிற் கை வைக்கமாட்டுவாயா? நான் எதைக் கருதினேனென்று உனக்கு நன்கு விளங்கும்! என்னுடைய இறந்து போன பிதாவையும் அந்தச் சாபத்திற் சேர்க்கவேண்டி இல்லாதிருந்தால் கொடிய பாதகியே! உன்னைச் சபித்துப்போடுவேன். நான் குற்றவாளியாகவிருந்தால் (அல்லவென்றதற்குக் கடவுளே சாட்சி) அக்குற்றம் உன்னுடைய கெட்ட உபாயதந்திரத்திற்கு எவ்வளவுடையதாயிருக்குமென்றதை நினை பாவியே! எனக்குமுன் க்ஷண நேரமாவது நில்லாதே; போபோ என்று கதறினள். அப்பொழுது பூங்காவனம் சென்ற சம்பவங்களையெல்லாம் வெளியிட்டு விடுவாளோவென்று பயந்து நடுக்கத்துடன் அறையினின்றும் புறப்பட்டுக் கீழ்வீட்டுக்கு வந்தாள். அங்குச் சிசுபாலன் பெரிய தாயார் எங்கேயென்று கேட்டபொழுது தான் இன்னது சொல்வதென்று அறியாதவளாய் அவனை விலகிச் சென்றனள். அவன் அவள் பின்சென்று அம்மா! தயவு செய்து, என்ன சம்பவித்தது சொல்லுங்களென்று கேட்டான். மங்களம், தம்பீ! அதுபற்றி என்னைக் கேளாதிரு என்று மன்றாடிக்கேட்கின்றேன். அவளே, ஜெமீன்தாரின் பத்தினியாக்கப்பட்ட பாட்டிற்கு எனக்கு நிந்தையான ஏச்சும் பேச்சும் வந்திருக்கின்றன. அவன் என்ன சம்பவித்ததென்று நன்றாய் விளங்கினவனாய், அது மெத்த அரிப்புத்தான். நீர் பெரிய தாயாரைக் கூட்டிக்கொண்டு போகாமற் போகின்றீராவென்று கேட்டால், வாசலில் காத்துக்கொண்டு நிற்கும் வண்டியில் ஏறும்படிபோனவள் ஆம் தம்பீ! தயவுசெய்து என்னைப் போகவிடு, இவ்விடத்திற்கு வந்து போதியவளவு பெற்றுக்கொ

ண்டேன் என்றாள். அதற்கு அவன் ஆனால் ஜமீன்தாரின் பிரதானமான கட்டளை, நீர் என்பெரிய தாயாரையுங் கூட்டிக்கொண்டு போக வேண்டுவது என்றான். மங்களம் எசமானி வரமாட்டாள்; அப்படிச்செய்தது கடவுள் கிருபைதான் என்று சொல்லிக்கொண்டு, பயத்துடனும் கோபத்துடனும் தள்ளாடிக்கொண்டு வண்டியில் விரைவாகச்சென்று விட்டாள். அவன் என்ன செய்வதென்று அறியமாட்டாது சிறிது நேரம் பிரமித்து நின்றுவிட்டான். அதனால் ஜெமீன்தாரின் கட்டளை நிறைவேற வில்லை. ஆனால் என்ன நடக்கவேண்டிய தென்பதை அறியும்படி பெரிய தந்தையின் அறைக்குட்போக எண்ணினான்.

இந்தச் சமயத்தில் பூங்காவனத்தின் அறையில் என்ன நடைபெறுகிற தென்று பார்ப்போம். முன் சொல்லப்பட்டவிதமாய் மங்களம் ஓடிப்போனவுடனே அவள் முன்னிருந்த மூர்க்கத்தனத்தினின்றும் சாந்தமடைந்து தனது நிராதரவான நிலைமையைக் காட்டுமாறு தன் தாதிகளைப்பார்த்தாள்.

இருகண்களிலுங் கண்ணீர் சொரிய நின்ற தாதியாகிய வள்ளியம்மை யென்பவள் வண்டி கட்டச்சொல்லட்டுமா என்று கேட்டனள். பூங்காவனம், வேண்டாம், நான் கால்நடையாகப் புறப்படுவேன்; ஆதனமற்றவளும் பயமவற்றவளுமாய் வற்கப்பட்டேன்; அப்படியே தள்ளப்பட்டுக் கெட்டபெயருடன் போவேனென்று மொழிந்தனள். அப்பொழுது வள்ளியம்மை அழுது கொண்டு பூங்காவனத்தின் காலில் வீழ்ந்து, தாயே! அப்படிச் செய்ய வேண்டாம் என்று மன்றாடினள். அவள் உறுதியாய் நின்று அந்த உறுதிப்படியேதாதி எழுந்து அமைதியுடன் அவள் கேட்ட வஸ்துக்களைக் கொடுத்தாள். அவள் புறப்படும்பொழுது கனிந்த பார்வையாய் அவளைப்பார்த்து வள்ளியம்மையே! நீ என் மீது காட்டியபட்சம் என்னை உருகச்செய்கின்றது. ஆ? மெய்யாகவே இந்தச் சமயத்தில் அப்படிப்பட்ட பட்சத்தை உணருவதும் ஒரு சோதனைதான். நல்லது நான் போகின்றேன், எனக்காக நீ வருத்தமடைய வேண்டாம். நான் எப்போது புறப்பட்டேன் என்று உன்னைப் பிரபு விசாரிக்கும் வரையும் இங்கே தங்கியிரு; என்னை அவர் மனைவியாகக்கொண்டு வரும் பொழுது நான் ஒன்றுங் கொண்டு வாராதபடியால் நான் இவ்விடத்தை விட்டுப் போம் பொழுதும் ஒன்றுங் கொண்டு போகவில்லை என்று சொல்லு. நான் பிரபுவுக்கு இப்போது அனுப்பிய காகிதத்தில் கண்டிருக்கிற இரகசி

யம் இந்த மேஜைக்குள் இருக்றகிதென்றுஞ் சொல்லு என்று கூறி அதைத்திறந்து அருட்பிரகாசம் கொடுத்த கணையாழியை எடுத்துக்கொண்டு அவளைத் திரும்பிப்பாராத படியே அவ்வறையை விட்டு நீங்கிப் பின்புறக் கதவுவாயிலாய்ச் சென்றனள். அதை ஒருவருங் கவனிக்கவில்லை. வள்ளியம்மை தன்னை நேசித்திருந்தவளும் அப்படியே பட்சமாயிருந்தவளுமான பூங்காவனம் பிரிந்ததை நினைந்து அழுத படியே இருந்து விட்டாள்.

இந்தச் சம்பவம் நடக்கும் பொழுது சிசுபாலன், ஜெமீன்தார் பூட்டிக்கொண்டிருந்த அறைக்குட் சென்றிருந்ததை வாசகர்கள் அறிவார்கள். அவன் மங்களம் பூங்காவனத்தை அழைத்துச் செல்லாது தனித்துப் போய் விட்டாளென்று அவருக்குக்கூறி இனிமேல் நடக்க வேண்டிய கட்டளையைப் பெறும்படியே அங்குச் சென்றிருந்தான். பத்து நிமிஷத்தில் அவன் வெளிவந்து பணியாளனை அழைத்துச் சாதாரணமான வண்டியைத் தடையின்றி ஆயத்தம் பண்ணும்படி கட்டளையிட்டபின், பூங்காவனம் இருந்து புறப்பட்ட அறையின் கதவைத்தட்டினுன். இன்னும் அழுது கண்ணீர் சொரிந்துகொண் டிருக்கும் வள்ளியம்மை கதவைத் திறந்தாள்.

சிசுபாலன்:— (துக்கமுகத்துடன்) சீமாட்டியைக்கண்டு சில வார்த்தைகள் பேசவேண்டும்.

வள்ளியம்மை:— (அதிகம் அழுகையுடன்) ஐயாவே! எசமாட்டி வெளியே போய் விட்டாள்.

சிசுபாலன்:—(போய் விட்டாள் என்று ஆச்சரியமாய்)என்ன சொல்லுகிறுய்? வெளியே வண்டியொன்றும் புறப்படவில்லையே!

வள்ளியம்மை:— ஐயா! எசமானி வண்டியிற் போகப் பிரியப்படாமற் கால்நடையாகவே போய் விட்டாள்.

சிசுபாலன்:— கால்நடையாகவா? ஆனுல் எங்கே? எவ்விடத்திற்கு? என்ன சொல்லிப்போகிறுள்?

வள்ளியம்மை:— என் ஆண்டவனே! இவைகளொன்றும் எனக்குத் தெரியாது. நான் தங்களுக்குச் சொன்னபடியே, எசமாட்டி வந்தனஞ்சொல்லி விட்டுப் புறப்பட்டு வெளியே போய் விட்டாள்.

உடனே சிசுபாலன் மெதுவாகப் படிகள் வழியாய் இறங்கி வரும்பொழுது அதிக ஆலோசனையுள்ளவனாய் விரைவாக மறுபடியும் ஜெமீன்தார் பூட்டிக்கொண்டிருந்த அறையின் கதவைத் தட்டினான். இம்முறை கதவு திறக்கப்படவில்லை. எரிச்சலான சத்தத்துடன் உள்ளேயிருந்த பிரபு அது யார்? ஏன் என்னை ஓயாமல் தொந்தரை செய்கிறீர்கள் என்றார். அவன் பெரிய தந்தையாரே! அது நான்தான்; எசமானி கால்நடையாகப் புறப்பட்டு விட்டாளென்றான். உள்ளேயிருந்த எசமான் போதும் இனிமேல் தொந்தரவு செய்ய வேண்டாம்; என்னைத்தனிமையில் விட்டு விடும்படி வற்புறுத்துகின்றேன். சிசுபாலா! என்னிடத்தில் ஒருவரும் வரக்கூடாதென்று கட்டளைசெய். நான் தனியேயிருக்க வேண்டுமென்றார். அவன் வேறொன்றுஞ் சொல்லத் துணியாதவனாய் விரைவாக அவ்விடத்தை விட்டு நீங்கி ஒரு வேலைக்காரனைக் கூப்பிட எத்தனிக்கும் பொழுது தன்னுடைய வேலைக்காரனாகிய கணபதி யென்பவன் அவ்வழியே வருவதைக்கண்டு அடே! இங்கேவா; சில நிமிஷங்களுக்கு முன் ஆயத்தம் பண்ணும்படி நான் கட்டளை பண்ணிய வண்டியைக் கட்டவேண்டா மென்று போய்ச் சொல்லு என்றான். அவன் ஆம் ஐயா! என்று சொல்லிக்கொண்டு தன் எசமானின் கட்டளையை நிறைவேற்றும்படி ஓடினான்.

சாயங்காலம் ஆறுமணியாய் விட்டது. அங்குத் தங்கியிருந்த விருந்தினர் சிலர் சபாமண்டபத்திற் கூடி நடந்த சம்பவங்களில் தாங்கள் தாங்கள் அறிந்த அளவு இரகசியமாகப் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களிற் சிலர் தாங்கள் இச்சமயத்தில் அங்கிருப்பது வீட்டுக்காரருக்கு வசதியீனத்தைக் கொடுக்கக்கூடும், ஆனபடியாற்றாங்கள் புறப்படவேண்டு மென்று சொன்னார்கள். மற்றவர்கள் பூங்காவனம் புறப்பட்டதை அறியாதவர்களான படியால் ஜமீன்தார் பத்தினிமீது விபரீதமாய்விளங்கிக்கொண்டிருக்கின்றார் என்றும், இவர்களைச் சீக்கிரம் சமாதானமாக்கிவிட வேண்டுமென்றும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இப்படி இரகசியமாக இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் பொழுது சிசுபாலன் அங்கு வந்தனன். அவன் முகத்தோற்றத்தை அவர்கள் கவனித்த பொழுது பயங்கர சம்பவம் நிகழ்ந்து விட்டதாயறிந்தார்கள். சிசுபாலன் இதுவரையும் மாளிகையிலுண்டான சந்தோஷத்தை மாற்றத்தக்க மாறுதல் உண்டானதைப் பற்றிச்

சொல்லத் தனக்குத் துக்கமாயிருக்கிற தென்றும் மெதுவாயும் விளங்கக்கூடியதாயும் ஜமீன்தாரையும் பத்தினியாரையும்ஒழுங்கு படுத்தக் கூடாதபிரிவு வந்து விட்டதென்றும், எஜமானி மாளிகையை விட்டுப்புறப்பட்டு விட்டாளென்றும், அவர் துக்க மிகுதியினால் தன் அறையிற் பூட்டிக்கொண்டிருக்கிறாரென்றும் மொழிந்தான். விருந்தினர் இன்னும் விபரமாகச் சம்பவங்களை அறிய விரும்பியும் அவர்களின் பெருந்தன்மையினால் யாதொரு கேள்வியுங் கேளாது தங்கள் தங்கள் இருப்பிடஞ் சேருகிறதேயல்லாமல் வேறொன்றுஞ் செய்யத் தெரியாதவர்களாய்ப் புறப்பட எத்தனித்தனர். அப்பொழுது கிசுபாலன் உபசாரமாய்ப் போசனஞ் செய்து போகும்படி வேண்டியும் அவர்கள் மறுத்து ஏழுமணியளவில் அம்மாளிகையை விட்டுப் போய்விட்டார்கள்.

அதன்பின் சிசுபாலன் தன் தம்பியாரை வந்து காண்கின்றேனென்று முன் வாக்குப் பண்ணியிருந்தபடி ஒருமைல் தூரத்தேயுள்ள வாடி வீட்டுக்கு விரைவாகச் சென்றனன். அவனது விரைவான நடையினால் கால்மணிநேரத்துள் வாடி வீட்டைச் சேர்ந்து அருட்பிரகாசம் எங்கே யென்று தலைவனை விசாரித்தபொழுது அவன் சிசுபாலனின் வருகையை ஆவலுடன் காத்திருந்த அருட்பிரகாசத்துக்கு முன்பாக விட்டான். தமையனும் தம்பியும் அவ்வீட்டுத் தோட்டத்தின் ஒருபுறம் தனிமையிற்போய் நின்றார்கள். அப்பொழுது அருட்பிரகாசம் அண்ணா! என்னசங்கதி?

சிசுபாலன்:— தம்பீ! ஐயோ! ஒன்றும் நன்மையாயும், அனுகூலமாயும் முடியவில்லை.

அருட்பிரகாசம்:—(ஒன்றும் நன்மை இல்லை யென்று சொல்லிக்கொண்டு ஆதரவற்ற முகத்தோற்றத்துடன்) அண்ணா! என்ன சம்பவித்தது? நீர் பெரிய தகப்பனாரிடம் விபரமாய்—

கிசுபாலன்:—(தடுத்துத்)தம்பீ! என்று அவனின் கையைப் பிடித்து நான் அவருக்கு என்னாற் கூடிய வளவெல்லாஞ் சொன்னேன்; அனுகூலப்படவில்லை.

அருட்பிரகாசம்:— அண்ணா! என்கடிதம் பிரபுவுக்கு வந்து சேரவில்லையா?

சிசுபாலன்:—(ஆச்சரியத்துடன்) நான் அறியேன்.

அருட்பிரகாசம்:— அண்ணா! நான் நினைக்கிறவரையில், தாங்கள் வீடு விட்டுப் புறப்படுமுன் அது வந்து சேர்ந்திராது.

அரைமணி நேரத்துக்கு முன் ஒரு சிறுவனை அனுப்பினேன். நான் பைத்தியம் பிடித்தவனாயும், ஆவேசமுள்ளவனாயும், துணிவுள்ளவனாயு மிருந்தேன்; காலம் சென்றபடியே யிருந்தது; தாங்கள் வரவேயில்லை; என்ன செய்கிறதென்றும் எனக்குத் தோற்றாமலிருந்தது. ஆத்திரம் தாங்க முடியவில்லை.

சிசுபாலன்:— (தடுத்து) காகிதத்தில் என்ன எழுதியிருந்தாய்? தம்பி ?

அருட்பிரகாசம்:— என்ன எழுதினேனென்று எனக்குத் தோற்றவில்லை; அதை எழுதும்பொழுது பைத்தியக்காரனைப் போலிருந்தேன். இப்பவும் பைத்தியமாகத்தான் இருக்கின்றது. கடவுளே! பெரியதாயார் யாதாமொரு குற்றமுஞ் செய்யவில்லை. அண்ணா! அவள் இப்போ எங்கே? அவளுக்கு என்னசம்பவித்தது?

சிசுபாலன்:— அவள் மாளிகையை விட்டுப் புறப்பட்டு விட்டாள். தன்னுடைய வீட்டை இழந்து விட்டாள். நான் ஒரு பாதகன்; இந்த நாசமான எண்ணத்தை வரும்படி செய்து இப்பபங்கரமான சம்பவங்களை யுண்டாக்கி விட்டது நானே என்று சொல்லி (தன்கைகளை உதறிக்கொண்டு) அண்ணா அவள் புறப்பட்டு விட்டாளென்று சொல்லுகிறீர்கள்; எங்கே போயிருக்கிறாள் ?

சிசுபாலன்:— எனக்கொன்றுந்தெரியாது. மங்களம் அவளைக் கூட்டிச்செல்லாது தனியே சென்று விட்டாள். ஆதரவற்ற பூங்காவனமும் தனியே கால் நடையாகச் சென்று விட்டனள்.

அருட்பிரகாசம் (ஆ! கடவுளே! இப்படி நடக்குமா? பூங்காவனம் தனித்து யாதொரு துணையுமின்றிக் கால் நடையாகத் தள்ளப்பட்டவளாய் அலைந்து திரியவா?) அண்ணா! தாங்கமுடியாமலிருக்கின்றேனே யென்று தலைப்பாகையை யெடுத்துக்கொண்டு பித்தம் பிடித்தவனைப் போல் கதவண்டை போயினன். அப்பொழுது சிசுபாலன், தம்பியின் கையை இறுகப்பிடித்து எங்கே போகின்றாயென்று கேட்க, அவன் எங்கேபோவேன்? என்னுடைய புத்தியற்ற மனோவிகாரம் பழுது பண்ணிய அவளைக்கண்டு காட்டுமானால் ஆறுதல் செய்யவும் மன்றாட்டவுங்கேட்கவும் செல்லுகின்றேன். அண்ணா தடை செய்யாதீர்கள்! என்று கூறிக்கொண்டு வாடி வீட்டை விட்டுப் புறப்பட்டு மீன்போல மறைந்து போனான். சிசுபாலன் முற்கதவுக்கு ஓடியும் அருட்பிரகாசம் அவன் கண்ணுக்குத் தோற்றவில்லை.

ஒன்பதாம் அதிகாரம் முற்றிற்று.

மா. சிவராமலிங்கம் பிள்ளை.

கல்வியின் மாட்சி.

(ஒரு சம்பாஷணை.)

சர்வகலாநிதி:— குழந்தாய்! ஆனந்தஸாகர! உனக்கு வயதென்ன?

ஆனந்தஸாகரன்:—என் ஸத்குருநீவே! அறிவேன்; அடியேன் வயது பனிரண்டு.

சர்வ:—இந்தப்பனிரண்டு வயதும் எப்படி வளர்ந்ததென்று அறிவாயா?

ஆனந்த:—அறியேன் அடியேன்.

சர்வ:—உன்னை அறியாமலல்லவா வளர்ந்திருக்கிறது; அதனை நீ வளராவண்ணம் தடுத்தல் சாத்தியமா?

ஆனந்த:— தடுத்தல் முடியாத காரியம்.

சர்வ:—இப்படி நம்மை யறியாமல் வளர்ந்து வரும் வயது எதனால் பிரகாச மடையவேண்டும்? ஆகிருதியினாலென்கிறாயோ! அன்று; அறிவாலல்லவா பிரகாச மடையவேண்டும். இதை முன்னொரு ஸமயம் கூறியிருக்கிறேனல்லவா?

ஆனந்த:—ஆம், அதனை மறந்து விட்டேன்.

சர்வ:—குணமமைந்த சிடனே! "குணமது கைவிடேல்" என்பதை உணர்ந்திலாயின்னும். உணர்ந்தாயாயின், இதனை மறந்திருக்க மாட்டாய். காலத்தை வீணே கழிக்கின்றாய். அறிவை யடைய வழிதேடுகின்றாயில்லை. கடந்தநாள் கடந்ததேயன்றி மீண்டும் வருமோ? சோம்பலை யொழி. "சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்" என்று உபதேசித்த நமது ஒளவைப் பிராட்டிக்கு நீ செய்யும் கைம்மாறு யாது? அவளுடைய வாக்கியத்தைப் பரிபாலிப்பதையன்றி வேறில்லை யென்று உணர்வாய். கோபத்தையகற்று. இராமாயணம் பல விடங்களில் கோபம் ஆகாது என்று விரித்துக்கூறுவதை நீ இன்னும் அறியவில்லைப்போலும்.

மூங்கிலிற் பிறந்த முழங்குதீ மூங்கின்
முதலற முடிக்கு மாபோலத்,
தாங்கரும் சினத்தீ தன்னுளே பிறந்து
தன்னுறு கிளையெலாந் தகிக்கும்;

ஆங்கதன் வெம்மை யறிந்தவர் கமையால்
அதனையுள் ளடக்கவு மடங்கா,
தோங்கிய கோபத் தீயினை யொக்கும்
உட்பகை யுலகில்லவே றுண்டோ.?

ஸ்ரீ ராமபிரான் தம்மைக் காட்டுக்குப் போக ஏவிய கைகேயி யிடத்துங் கோபங் கொண்டவரல்லர்; கூனியிடத்துங் கோபங் கொண்டவரல்லர்; கிஷ்கிந்தா நகரில் சுக்கிரீவன் முதலிய வானர சேனைகள் வாக்கின்படி குறித்தகாலத்தில் வாராதபோதும் கோபித்தவரல்லர். ஆதலின், கோபத்தை விரைவாய் நீக்க வேண்டும்.

ஆனந்த:— என்னிடம் அன்பு பூண்டு என்னை ஆதரிக்கும் குருவே! தங்கள் போதனையை மறந்தது தவறுதான். நீங்கள் கூறிய யாவும் உண்மையே! கழிந்த காலம் வாராது தான். என் வயதைப் பிரகாசிக்கச் செய்யும் அறிவை நான் அடைவதெங்ஙனம்? அது தான் தெரியவில்லை.

சர்வ—அடே! மூடா! என்ன கேள்வி கேட்கின்றாய்! கல்வி நன்கு கற்றுணர்வதனாலென்று முன்னமேயே நானுனக்குக் கூறியிருக்கின்றேன் அல்லவா?

ஆனந்த:—ஆமாம்; அதனை மறந்து விட்டேன். கல்வியைக் கற்பதால் பயன் யாது? கற்காவிடில் கெடுதி யென்ன? கல்வியைக் கற்று எவர்கள் மேன்மை அடைந்திருக்கின்றனர். கற்காமல் எவர்கள் தாழ்மை அடைந்திருக்கின்றார்கள் என்பதைத் தாங்கள் அடியேனுக்கு அன்பு கூர்ந்து சவிஸ்தாரமாய் உரைக்க வேண்டுகின்றேன்.

சர்வகலாநிதி:—அன்ப? கூறுகின்றேன்; சாவதானமாய்க் கேள். மனிதர்க்கு இன்றியமையாததா யிருக்கின்ற அறிவினாலன்றோ அன்னோர் ஏனைய ஜீவராசிகளினின்றும் பகுக்கப்பட்டு அவற்றினும் மேலானவர்களாகக் கருதப்படுகின்றார்கள். மனிதர் ஜீவராசிக ளெல்லாவற்றுள்ளும் சிறந்தவர்களாயினும், அறிவு இல்லாவிடத்து விலங்கினத்திற்குச் சமானமானவர்களே. இது பற்றியே கல்வியிற் பெரிய கம்பரும்

“தக்கவின்ன தகாதன வின்னவென்
றொக்க வுன்னல ராயினுயர்ந்துள
மக்களும் விலங்கே” —என்று கூறினர்.

அறிவென்னும் சுடரை அறிவின்மை யென்னும் ஜீமூதம் மறைக்கின்றது. அதனைக் கல்வி யென்னுங் காற்றால் நீக்குவதே அறிவாளரியல்பு. கல்வியைப் பற்றி நமது பெரியோர் பின் வருமாறு புகழ்ந்து கூறுகின்றார்கள்.

கல்வியே நல்லுயிரைக் காப்பதற்கு நற்றுணையாம்
கல்வியே நல்லுடம்பைக் காப்பதாம்—கல்வியே
செல்வப் பொருளின்பம் சேர்க்குந் தலைமைசேர்
செல்வமாஞ் செய்யுஞ் சிறப்பு. 1

கல்வி யறிவுதருங் கற்பை நிலைநிறுத்தும்
இல்வாழ்வுக் கேற்ற இசையெல்லாம்—சொல்விக்கும்
இந்நிலத்து மேன்மையெல்லா மெய்துவிக்கும் முத்தியெனும்
அந்நிலத்துக் குற்ற துணையாம். 2

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை. 3

குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு. 4

மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னனுக்குத்
தன்தேய மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற விடமெல்லாஞ் சிறப்பு. 5

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை கல்வியி
னுண்ணிய வாயபொரு ளில்லை—கொண்டானிற்
றுன்னிய கேளிர் பிறரில்லை சன்றாளின்
என்ன கடவுளு மில். 6

வெள்ளத்தாற் போகாது வெந்தணலால்
வேகாது வேந்த ராலுங்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்
நிறைவொழியக் குறைபடாது

கள்ளர்க்கோ மிகவரிது காவலோ
மிகவெளிது கல்வியென்னும்
உள்ளத்தே பொருளிருக்க வுலகெல்லாம்
பொருள்தேடி யுழல்கின்றீரே. 7

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 8

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. 9

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு. 10

எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 11

உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர். 12

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.
கல்லா வொருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே. 13

நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றில னாயிற் கீழிருப் பவனே. 14

அறிவுடை யொருவனை யரசனும் விரும்பும். 15

இத்தகைய பலனை யளிக்குங்கல்வியை யாவரேவிரும்பார்? கல்வியின் பெருமையைப்பற்றியும் அவ்விஷயத்தில் பெரியோர்கள்கூறியவற்றைப்பற்றியும் இங்குச்சுருக்கிக்கூறுகின்றேன். நமது ஜியார்ஜ் சக்கரவர்த்தி அவர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்தகாலம்கல்கத்தாயூனிவர்ஸிட்டி அங்கத்தினர்கள்சமர்ப்பித்த வந்தனோபசாரத்திற்குப்பதிலுரைத்தபொழுது கல்விப்பொருளே பொருள், ஏனையவை பொருளல்ல வென்று கல்வியைப் புகழ்ந்து ஒவ்வொருவரும் கல்வி கற்று அவரவர் தொழிலில் சிறந்தவர்களாய்த்தேசத்திற்குப் பெருமையை உண்டு பண்ணத்தக்க குணம் பொருந்தியவர்களா யிருக்கவேண்டும் என்று, கூறியது என்றும் மறக்கற் பாலதன்றும். மதுரை காலேஜி ப்ரின்ஸிபாலான

வெங்கோபாசாரியார் B.A. அவர்கள் கல்வி விஷயத்தில் சொல்லுவது யாதெனில் "ஒவ்வொருவரும் தந்தம்தொழிலைச் செவ்வனே நடத்தும் பொருட்டுக் கல்வி கற்கவேண்டியதென்பது தெரிந்த விஷயமாம்; அனைவரும் கல்வி கற்பது அவசியம், அதனால் அநேக நன்மையுண்டு" என்பதே. மற்றும் பெரியோர்கள் கல்வி விஷயத்தில் பின் வருமாறு கூறுகின்றனர்.

இம்மை பயக்குமா லீயக்குறை வின்றால்
தம்மை விளக்குமாற் றாமுணராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கும் மருந்து.
வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பி னரசர்செறின் வவ்வார்
எச்சமென வொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற.

அடலாறு மன்னர் சோரர்
அபகரித் திடுவ தன்றும்
விடலாறு தமையன் தம்பி
விம்பினில் கொள்வ தன்றும்
உடல்கெடு சுமையு மன்றும்
உதவநின் றோங்கு நாளும்
கடலுடை புவியிற் செல்வம்
கல்வியின் மிக்க துண்டோ.

உனக்கு இன்னும் சில புத்திமதிகள் கூறுகின்றேன். வயதினாலும் கல்வியினாலும் பெரியவர்கள் வரும்போது சிறிவன்உட்கார்ந்திருந்தால் அவன் பிராணவாயு மேலெழுந்து செல்ல எத்தனப்படுகின்றது. எழுந்து வந்தனம் செய்வதால் மீண்டும் அது தன் நிலைமை அடைகின்றது. பெரியோர்களை நாள்தோறும் வந்தனம் செய்கின்றவனும் பேணுகிறவனுமாயுள்ளவனுக்கு ஆயுள் கல்வி கீர்த்தி பலம் இந்த நான்கும் விருத்தியாகின்றன. வெறும் படிப்பினும்,தான் அறிந்தவற்றைச் செவ்வையாக அநுஷ்டிப்பதே சிறந்தது. இது பற்றியே திருவள்ளுவர்

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக. என்று கூறினர். நாம் கல்வியில் தேர்

ச்சி பெறுவது மாத்திரமன்றிப் பிறருக்குச் சொல்லுந்திறமையும் பெறுவது நன்று. இது பற்றியே, குமாரகுருபர சுவாமிகள்

" எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகு - உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனி னென்னு மஃதண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து" என்று கூறியிருக்கின்றனர். நாம் கற்றவற்றை மறவாதிருத்தல் அத்தியாவசியமாம். அங்ஙனஞ் செய்யாது கற்றவற்றை மறந்து மேன்மேலும் கற்பது சுவரின்றிச்சித்திர மெழுதுவதை யொக்கும். இதுபற்றியே நமது மூதாதைகள்

" வருந்தித்தாம் கற்றன ஓம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் தொடங்கல்-கருந்தனம்
கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட் டரிப்பரிந்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்" எனக்கூறினார்கள். நாம் படித்துப்புலவராய் விட்டோமென்று செருக்கடைதல் கூடாது. இப்புவியில் நம்மை விடப்படித்தவர்கள் அநேகர் உளர் என்று நினைத்து மேன்மேலும் கற்கவேண்டும்

முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க-சிற்றுளியால்
கல்லும் தகரும் தகரா கனங்குழாய்!
சொல்லுலைக் கூடத்தி னால். என்று நீதி நெறி விளக்கங்கூறுவது இங்கு நன்குணர்தற் பாலது.

(தொடரும்)

M. M. நாராயணசாமி ஐயர்,

முடிகொண்டான்.

யுத்தம்.

இப்போது ஐரோப்பாவில் நடைபெற்றுவரும் யுத்தம் விரைவில் முடியுமென்று தோன்றவில்லை. நேச ராஜாங்கத்தாருக்கும், ஜெர்மனியருக்கும் மேற்கரங்கத்தில் இப்போது உக்ரமாக யுத்தம் நடந்துவருகின்றது. அங்கு நேசராஜாங்கத்தாரே வெற்றியடைந்து வருகின்றனரென்று தெரிகின்றது. ஆனால் அது யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வெற்றியாக ஏற்படவில்லை. பெல்ஜியர் இன்னும் வீராவேசத்தோடு ஜெர்மனியருடன் யுத்தஞ் செய்து வருகின்றார்கள்.

கீழரங்கத்தில் ருஷியர் வெற்றிபெற்றுவருகின்றனரென்றும், ஆஸ்ட்ரியாவைச் சேர்ந்த ரீமில் என்னும் பட்டணம் ருஷியர் வசமாய் விட்டதென்றும் தெரிகின்றன.

கார்ப்பேதியன் மலைப் பிரதேசத்திலும், போலண்டிலும் ருஷியர் ஆஸ்டியரியருடனும்—ஜெர்மானியருடனும் உக்ரமாக யுத்தஞ் செய்துவருகின்றனர்.

நேச ராஜாங்கத்தார், டார்டனல்ஸ் ஜல சந்தியில் போர்க்கப்பல் வாயிலாக டார்டனல்ஸ் கோட்டைகளைத் தாக்கிவருகின்றனர். இந்த ஜலசந்தி மிகுதியும் நெருக்கமானதினாலும், அங்குத் துருக்கியர் கடற்சுரங்கங்கள் வைத்திருப்பதினாலும், நேச ராஜாங்கத்தார்களின் போர்க்கப்பல்கள் விரைந்து செல்வதற்கு முடியாதனவாயிருக்கின்றன; அங்கு நேச ராஜாங்கத்தாருடைய 3 கப்பல்கள் சுரங்கங்களிற் முக்கிக் கடற்கிரையாயின. அதனால், நேசராஜாங்கத்தார் மிகு ஜாக்கிரதையா யிருந்து யுத்தஞ் செய்து வருகின்றனர். ருஷியரும் பாஸ்பரஸ் சலசந்தி வழியாகவந்து டார்டனல்சைத்தாக்க முயற்சிசெய்து வருகின்றார்கள்.

ஆஸ்ட்ரியரும், ஜெர்மனியரும் இத்தலியின் வடக்கு எல்லைப்புறத்தில் பலமாக அரண்செய்துவருகின்றார்கள். அதனால் இத்தலியும் நேச ராஜாங்கத்தாரோடு யுத்தத்திற் சேருமென்றாகிக்க வேண்டியிருக்கின்றது.

ஹாலண்டுக்கும் ஜெர்மனிக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கின்றது. இது எவ்வாறு முடிவாகுமென்று தெரியவில்லை. சொ

மேனியா வாயிலாக ஜெர்மனி ஒரு பெரிய சேனையைத் துருக்கிக்குக்கொண்டுபோகப் பிரயத்னப்பட்டு வருகின்றது. ரோமேனியா அதற்கு வழிவிட மறுத்து விட்டது. இதனால் ரோமேனியாவிற்கும், ஜெர்மனிக்கும் விவாதம் நேரிடும்போ லிருக்கின்றது.

வடகடலிற் செல்லும் வர்த்தகக்கப்பல்களுள்சிலவற்றை ஜெர்மன் கீழ் நீர்க்கப்பல்கள் கடற் கிரையாக்கிவருகின்றன. இவ்வாறு செய்து வரும் ஜெர்மன் கீழ்நீர்க்கப்பல்களும், கடற்கிரையாகி வருகின்றன. ஜெர்மனியர் செய்து வரும் யுத்தம், யுத்த நிபந்தனைகளை யநுசரித்து நடக்கின்றதென்று தெரியவில்லை. அதனால் ஜெர்மனி விரைவில் நாசத்தை யடையுமென்பது தீர்மானமாம்.